# மினுவான்கொடை பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 25 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மினுவான்கொடை பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததென்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினுவான்கொடை பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2009 ஆம் ஆண்டிற்குரிய நானாவித கடன்கொடுத்தோர்கள் பதிவழித்தல் ரூபா 4,376,225 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதலாக களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கில் செவு வைக்கப்பட்டமையினால் அப்பெறுமதியினால் களஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நன்கொடையாகக் கிடைத்திருந்த இரண்டு குப்பை வண்டிகளின் பெறுமதியான ரூபா 41,250 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைப்பதற்குப் பதிலாக ரூபா 20,625 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மினுவான்கொடை இலங்கை வங்கிக் கிளையில் மாற்றப்பட்ட ரூபா 29,616 தொகையானது வட்டி வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 03 நிலையான வைப்புக்களுக்குரிய ரூபா 27,402 வட்டி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 175,842,252 ஆக இருந்ததுடன் அதற்குரிய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 184,595,472 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின்போது வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 495,555 முற்பணம் தொடர்பாக முற்பணம் வழங்கப்பட்ட திகதி மற்றும் தீர்க்கப்பட்ட திகதி என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் என்பனவற்றிக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவு | வீடமைப்பு மற்றும் சன சமூக அபிவிருத்தி சம்பந்தமாக சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கான செயற்குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) ஒழுங்கு விதிகள்

---

| | | |
|---|---|---|
| (i) | 50 ஆவது விதி | வாகனங்கள் மற்றும் மிருகங்கள் தொடர்பான வரிகள் தொடர்பாக பிரதேச சபையின் 24 ஆம் மாதிரிப் படிவப் பிரகாரம் பதிவேடொன்றை சகல வீட்டுரிமையாளர்களுக்கும் வழங்கி பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 59 ஆவது விதி | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் வருமான பரிசோதகரால் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கணிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் வேலைகள் தொடர்பான பட்டியலொன்றையும் தயாரித்து ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iii) | 193 ஆவது விதி | பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை உள்ளபடியான செலவுகளுடன் இணக்கம் செய்து முரண்களுக்கான காரணத்தை விளக்குவதற்கான கூற்றொன்று குறித்த ஆண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு தயாரித்து கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படபட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) | 217 ஆவது விதி | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 218 ஆவது விதி | சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டின் இறுதியில் மெய்மையாய்வுச் சபை மூலம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | **இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| | நி.பி 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் 6 மாதங்களை விஞ்சிய ரூபா 1,111 பெறுமதியான 03 காசோலைகள் சம்பந்தமாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,608,424 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,252,627 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவைவருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்குமாறு 2011 பெப்ரவரி 07 ஆம் திகதிய எனது கடிதத்தின் பிரகாரம்

குறித்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் சமர்ப்பிக்குமாறு தலைவரிடம் கோரப்பட்டிருந்த போதிலும், அத்தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறானான செலவினமும் உரிய முரணங்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப் பட்டது | உள்ள வாறான | முரண் | பாதீடு செய்யப் பட்டது | உள்ள வாறான | முரண் |
| மீண்டுவரும் செலவினம் | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| ஆளணிக்கான வேதனம் | 26,768 | 21,749 | 5,019 | 25,173 | 20,959 | 4,214 |
| ஏனையவை | 26,724 | 27,730 | (1,006) | 23,638 | 28,132 | (4,494) |
| உப மொத்தம் | 53,492 | 49,479 | 4,013 | 48,811 | 49,091 | (280) |
| மூலதனச் செலவினம் | 95,600 | 347,035 | (251,435) | 70,557 | 142,466 | (71,909) |
| மொத்தம் | 149,092 | 396,514 | (247,422) | 119,368 | 191,557 | (72,189) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 03 | 02 |
| இரண்டாம் தரத்தினர் | 25 | 19 |
| ஆரம்ப தரத்தினர் | 71 | 63 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | ---- | -- |
| | 99 | 84 |

## 2.5 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,640,660 ஆக இருந்ததுடன், 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,812 ஆகும்.

## 2.6 நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

2010 இன் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் பின்வரும் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகையான நிதிஏற்பாடுகளுக்குரிய நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு ஈடுபடுத்தாமல் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மாற்றப்பட்டிருந்ததுடன் கட்டிட நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 39,692,532 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| செலவின விடயம் | செலவினத் தலைப்பு | பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா. |
| காணி சுவீகரித்தல் | 309(6) | 100,000 |
| வாகனங்கள் கொள்வனவு | 109(2) | 500,000 |
| கடன் மீளச் செலுத்துதல் | 310(2) | 2,500,000 |
| வீதி முதலீட்டுச் செலவினம் | 309(7) | 6,900,000 |
| | | 10,000,000 |

## 2.7 போதியளவான அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

2010 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவினத்திற்காக செலவினத் தலைப்பு 6 இன் கீழ் ரூபா 95,600,000 தொகையான நிதி ஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2 குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 96,670,000 தொகையும், செலவினத் தலைப்பு மாற்றங்களின் மூலம் ரூபா 10,000,000 தொகையும் பெறப்பட்டதன் பின்னர் நிதி ஏற்பாடு ரூபா 202,270,000 தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீதிகள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் போன்ற செயற்பாடுகள் மற்றும் உபகரணக் கொள்வனவுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 347,035,274 தொகை செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன்

ஏற்பாட்டுத்தொகையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட ரூபா 144,765,274 தொகைக்கான அதிகாரம் பெறப்படாமல் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) 1999 யூலை மாதம் தொடக்கம் 2002 யூன் மாதம் வரை சபையின் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நிலுவைச் சம்பளம் ரூபா 19,975 தொகை மீளநிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 27,116,465 தொகை மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ்வங்கிப் பணம் குறுகிய கால முதலீடுகளிலேனும் முதலீடு செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) களஞ்சியக் கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் மீளச்செலுத்த வேண்டிய வைப்புப் பதிவேடு என்பன நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.9 உள்ளகக் கணக்காய்வு**

சபையினுள் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு

(ஆ) கணக்கீடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்